1994 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

முன்வருவார்களா, சிறப்பு நிதியைத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11.50*

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'அலை எப்போது ஓய்வது தலை எப்போது மூழ்குவது' என்பதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே வழக்கு இருப்பதையும், சொல்லி, அதிலே அவர் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையையும் எடுத்துச்சொல்லி, அரசு அதிலே செலவிடவேண்டும், பிறகு வசூல் செய்வதற்கு நான் வழிவகை செய்கிறேன் என்று ஒரு வழக்கறிஞருடைய முறையிலே இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அரசு அப்படி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இப்போது கோடை விடுமுறை தொடங்கி இருக்கிறது. ஆகவே, இந்த கோடை விடுமுறை முடிவதற்கு முன்பாக, அந்தக் கல்லூரியிலே ஒருசில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திரு.மா. சுந்தரதாஸ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பில் குழுவின் *126* முதல் *130* வரையிலான *5* அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்) *1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.